




■ இந்துமதி





# தூண்டில் புழுக்கள்

அன்று காலை சீக்கிரமே விழிப்பு வந்துவிட்டது அவளுக்கு. நேற்று ஞாயிற்றுக்கிழமையானதால் அலுவலகமில்லாதது நிம்மதியாக இருந்தது.



இன்று திங்கட்கிழமை. போயாக வேண்டும். ஒன்பதரை மணிக்கெல்லாம் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டாக வேண்டும். அதன்பின் உள்ளே நுழைந்து 'மேனேஜிங் டைரக்டர் எம்.சிவகுமார்' எனப் பெயர்ப் பலகையிட்ட அறைக்குள் நுழைய வேண்டும். அதை நினைத்தபோதே அடிவயிறு சுருண்டது. உள்ளே அமிலம் சுரக்க ஆரம்பித்தது. அவளைக் கண்ட உடனே அவனது முகம் இறுகும். கண்களில் கோபம் எட்டிப் பார்க்கும். பேச்சு சுறுசுறுவென்று காந்தத் தொடங்கும்.

"ஏன் லேட்டு?"

"இல்ல சார்... கரெக்டா வந்திட்டேன்..."

"என்ன கரெக்டா வந்திருக்க..? கடிகாரத்தப் பாரு... பத்து நிமிஷம் லேட்..."

"உங்க கடிகாரம் பத்து நிமிஷம் ஃபாஸ்ட்டு சார்..."

"என் ரூம் கடிகாரத்தைப் பத்தி எனக்கே சொல்றியா..?" என்று ஆரம்பித்து அரை மணி நேரம் நிற்க வைத்து டியூஷன் எடுப்பான். பின் குறிப்பிட்ட ஒரு ஃபைலைக் கொண்டு வரச் செய்வான். அதில் ஆயிரம் தப்பு கண்டுபிடித்து முகத்தில் தூக்கி எறியாத குறையாக மேஜைமீது வீசுவான். அல்லது தரையில் விட்டெறிவான். சிதறிப் பறக்கும் காகிதங்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு அவள் வெளியே வர வேண்டும், பின் மெதுவாக அத்தனை காகிதங்களையும் அடுக்கி மீண்டும் ஃபைல் பண்ண வேண்டும். ஃபைல்கள் தான் மாறுமே தவிர நிகழ்ச்சிகள் மாறுவதில்லை. நாள் தவறாமல் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

அவள் வேலையில் சேர்ந்து ஒரு மாதமாகிறது. இந்த ஒரு மாதத்தில் முதல் பதினைந்து நாட்கள் நல்ல

படியாகத்தான் போயிற்று. 'மகா... மகா' என்று வாய் நிறைய கூப்பிட்டான். சிரித்தவாறே வேலை வாங்கினான். தப்பு செய்தால் மெதுவாக சுட்டிக் காட்டினான்.

"பார்த்துக்க மகா... அடுத்த முறை இந்தத் தப்பு நடக்கக் கூடாது."

"நடக்காது சார்.. பார்த்துக் கறேன்."

"தட்ஸ் குட்.... எல்லாத்தையும் ரொம்ப சீக்கிரம் புரிஞ்சுக்குற மகா..." - தட்டிக் கொடுக்காத குறையாகச் சிரித்தான்...

கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் இதுபோல் நிம்மதியாகத் தானே போயிற்று.. அதன்பின் என்னவாயிற்று? ஏன் இவ்வாறு சிடுசிடுக்கிறான்? என்ன தப்பு செய்தோம்..? நினைத்து நினைத்துப் பார்த்தாள். ஒன்றும் பிடிபட வில்லை. யாரிடம் இதைப் பற்றி பேசுவது என்றும் தெரியவில்லை.

அலுவலகத்தில் பத்து ஆண்களுக்கிடையே மூன்றே பெண்கள் தான் இருந்தனர். நான்காவதாகத் தான் இவள் போய்ச் சேர்ந்தாள். இவளுக்கு அவனின் காரியதரிசி வேலை. ஜானகி டெலிபோன் ஆபரேட்டர். கிட்டத்தட்ட இவள் வயதிருக்கும். குழந்தையாக இருந்தபோது போலியோ வந்து வலதுகால் சூம்பிப் போய் இழுத்து இழுத்து நடந்தாள். விஜயலட்சுமிக்கு கம்ப்யூட்டரில் வேலை. நல்ல கறுப்பு. ஆனால் களையான முகம். திறமைசாலி எனப் பேசிக் கொண்டார்கள். மூன்றாவது டெய்சி. உயரமும் வாளிப்புமாக ஜாதிக்குதிரை மாதிரி ஆபீஸை வலம் வருவாள்.

**முதல் பதினைந்து நாட்கள் நல்ல படியாகத்தான் போயிற்று.**

"டெய்ஸி மேடம், டெய்ஸி மேடம்.." என்று எல்லோரும் அவளைச் சுற்றுவார்கள். எம்டியிடம் எது தேவை என்றாலும் சிபாரிசுக்கு டெய்ஸியிடம்தான் போவார்கள். என்ன மாயமோ..? அவளிடம் கேட்டால் நடந்து விடுவதை இவளும் கவனித்திருக் கிறாள். இந்த மூன்று பேரிடமோ, அல்லது அவர்களில் ஒருவரிடமோ இதுபற்றி பேசி விடுவது என்கிற முடிவுடன்தான் அன்று அவள் அலுவலகம் சென்றாள்.

அன்றும் அவனிடம் ஃபைலடி முகத்தடி எல்லாம் வாங்கிக் கொண்டு பகல் சாப்பாட்டு நேரம் வரை காத்திருந்தாள். வழக்கமாக தன் மேஜையிலேயே லஞ்ச் சாப்பிட்டு முடிப்பவள், டிபன் பாக்ஸுடன் அவர்கள் மூவரையும் தொடர்ந்து

சாப்பாட்டு அறைக்குப் போனாள். அவர்களுடன் அமர்ந்து தன் சாப்பாட்டு டப்பாவைத் திறந்தாள்.

"என்ன மகா.. இன்னிக்கு எங்களோடு சாப்பிட வந்திருக்க..?" – ஜானகிதான் முதலில் ஆரம்பித்தாள்.

"இல்ல.. உங்க கிட்ட ஒண்ணு கேக்கணும்."– என்று தயங்கினாள்.

"நீ என்ன கேக்கப் போறேன்னு எங்களுக்குத் தெரியும். நீயா கேட்கணும்னுதான் இத்தனை நாள் நாங்களும் பேசாமலிருந்தோம்."– விஜயலட்சுமி சொன்னாள்.

"நான் கேட்கப் போறது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அட! அதையெல்லாம் நாங்களும் அனுபவிச்சவங்கதானே.."– இது டெய்ஸி.

"அப்படின்னா எம்டி உங்களையும் சிடுசிடுத்தாரா..?"

"சிடுசிடுக்கிறது, ஃபைல தூக்கி எறியுறது எல்லாம் எங்களுக்கும் தான் நடந்திச்சு."

"ஆனா இப்போ... உங்க யார் கிட்டேயும் கோவம் காட்டலையே.."

"நாங்க ஆறின கஞ்சி பழங்கஞ்சி. நீதானே இப்ப பால்பாயசம்.."

"புரியலப்பா.."

"அவருக்குத் தர வேண்டியத நீ இன்னும் தரல. அதான் சிடுசிடுக்குறாரு. தந்தா சரியாப் போயிடுவாரு.."

"அவருக்குத் தர என்கிட்ட என்ன இருக்கு?"

"ஏன்.. நீ இல்ல..?"

"ஜானகி..!?" என்று அதிர்ந்தாள் அவள்.

"கால்நொண்டியான என்னைக் கூட விடல. கால்தானே நொண்டி... ஆனா உடம்பு நல்லாத்தானே இருக்குன்னு கேட்டாரு. எந்தக் குறையுமில்லாம வேக வச்சு தோலுரிச்ச சேப்பங்கிழங்கு மாதிரி வெள்ளை வெளேர்னு லட்சணமா இருக்குற நீ அவரைக் கண்டுக்காம இருந்தி யானா விட்டுறுவாரா..?"

**நீதானே இப்ப பால் பாயசம்...**

அவள் மனது பதறிற்று; உள்ளுக்குள் துடித்தது.

"அப்படியானால் அத்தனைக் கோபமும் அதற்கா..? அதற்குத் தானா..?"

"பின்ன வேற எதுக்கு? பார்க்க நல்லா இருக்கான். பணக்காரன். ஆபீசுக்கு சொந்தக்காரன். அப்படிப் பட்டவனை அவன்கிட்ட வேலை செய்யுற நீ கண்டுக்கலேன்னா தாங்குவானா..? ஈகோ விட்றுமா?"

"ஆபீஸ் வேலை செய்யத்தானே

வந்தேன்?"

"ஆபீஸ் வேலையில் இதுவும் தான் அடக்கம்..."

"அப்படின்னா... நீங்கள்ளாம்..?"

மருட்சியோடு முகம் வெளிற குரல் கரகரக்க கேட்டவளுக்கு டெய்ஸி பதில் சொன்னாள்.

"இதப்பாரு மகா... நாங்க மூணு பேருமே 'வித்'தான். வித்-அவுட் இல்ல. இந்த சிவகுமார் மட்டுமில்ல மகா; ஆபீஸுக்கு ஆபீஸ் 'மகளிர் மட்டும்' நாஸர்கள் இருப்பாங்க. ஆனா நாம ரேவதியோ, ஊர்வசியோ, ரோகிணியோ கிடையாது. அது படம். அவுங்களோடது நடிப்பு. ஆனா நம்முடையது நிஜம். நிஜம் எப்போதும் கசக்கும். சுடும்.." என்ற டெய்சியின் குரல் இறங்கி தழுதழுத்ததை உணர்ந்தாள் அவள்.

"என்ன செய்யிறது மகா. வேலை அவசியம். தேவைன்னு தானே வர்றோம். வரும்போதே வீட்டு நிலைமையைக் கேட்டுத் தெரிஞ்சுக்கறாங்கல்ல... நம்ம தேவையும், இயலாமையும் புரியும் போது அதை உபயோகப்படுத்திக் கறாங்க. வழி இல்லேன்னா விட்டுக் கொடுக்கணும். வழி இருந்திச்சுன்னா எட்டி உதைச்சிட்டுப் போகலாம்!"

"இன்னும் பத்து நாள் பார்ப்பான். நீ ஒத்து வரலேன்னா வேலையை விட்டுப் போம்பான்.."

"விட்டுக் கொடுக்கப் போறியா, இல்லாட்டி எட்டி உதைக்கப் போறியான்றது உன்னைப் பொறுத்த விஷயம் மகா.."



**அ**ன்று இரவு முழுதும் தூங்காமல் தவித்தாள் அவள். அப்படியாவது வேலையில் இருக்க வேண்டுமா என்று தோன்றியது. ஏற்கெனவே ஒரு வருடம் வீட்டில் இருந்தாயிற்று. படிப்பிற்கு சம்பந்தமற்ற நிறைய வேலைகள் செய்தாயிற்று. விற்பனைப் பெண் வேலையெல்லாம் கூட

பார்த்தாயிற்று. அங்கெல்லாம் கூட சின்னச் சின்னதா இதுபோன்ற தொந்தரவுகள் இருக்கத்தான் செய்தன. அவர்கள் யாரும் முதலாளிகள் இல்லாத காரணத்தினால் முறைப்பிலும், அதட்டலிலும் அடக்க முடிந்தது. ஆனால் இங்கு..? முதலாளியே இப்படி செய்கிறபோது...?

அவனுக்கு இணங்கி வேலையில் இருக்கத்தான் வேண்டுமா..? அம்மா விடம் சொன்னால் அரண்டு போவாள். ஏற்கெனவே பத்து மாத வீட்டு வாடகை பாக்கி. சாமான் களை எடுத்து வெளியில் வைக்கிற நிலைமையில் கிடைத்த வேலை. உடனடியாக வேலையைக் காரணம் காட்டி வீட்டை தக்க வைத்துக் கொண்டாயிற்று. இப்போது வேலை இல்லை என்றால்..? வீட்டின் சொந்தக்காரர் வாரி வெளியில் வீசத் தயங்க மாட்டார். ஜானகியும், விஜயலட்சுமியும், டெய்ஸியும் கூட இது போன்ற சங்கடங்களுக்காகத்தான் பெரிதான சங்கடத்தை சகித்துக் கொண்டிருக்கிறார்களோ..? புது டெல்லியில் ஓடும் பஸ்ஸில் அந்தப் பெண்ணை சிதைத்ததற்கும் இதுபோன்ற சிவகுமார்கள் வெளியில் தெரிய வராமல் ஏ.சி. அறைக்குள் சிதைப்பதற்கும் என்ன பெரிய வித்தியாசம்..? விழிகளின் ஓரம் நனைந்து தலையணையில் வழிந்தபோது பக்கத்து போர்ஷன் கடிகாரத்தில் மணி மூன்றடிப்பது கேட்டது.

ஆபீஸுக்கு ஆபீஸ் 'மகளிர் மட்டும்' நாஸர்கள் இருப்பாங்க.

மறுநாள் காலை முடிவு செய்ய இயலாத குழப்பத்துடனே அலுவலகம் கிளம்பினாள். டிபன் பாக்ஸை புடவைத் தலைப்பால் துடைத்து அவளிடம் நீட்டிய அம்மா அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"ரேஷன் அரிசி தீர்ந்து போச்சு மகா. வீட்ல அஞ்சு பேர் சாப்பிட றோம். ஒன்னாம் தேதிக்கு மேலதான் மறுபடியும் ரேஷன் அரிசி கிடைக்கும். ஆபீஸ் போற போது நாடார் கடைல பத்து கிலோ அரிசிக்கு சொல்லிட்டுப் போ. சம்பளம் வாங்கினதும் பணம் தர்றதா சொல்லு!"

அம்மாவை ஏறிட்டாள்.

"என்ன மகா பார்க்கற..?"

"ஒண்ணுமில்லம்மா. கதவைப் போட்டுக்க. மளிகைக் கடைல சொல்லிட்டுப் போறேன்" என்று கூறியபோது போராட்டம் நின்று ஒரு முடிவிற்கு வந்தவளாகப் படியிறங்கி மெல்ல தெருவில் நடக்க ஆரம்பித்தாள் அவள்...



ஆகஸ்ட் 16 கடைகளில்...
முழுமையான
வீட்டுப் பராமரிப்பு சிறப்பிதழ்!
கேஸ் சிலிண்டரை படுக்க வைக்கக் கூடாது ஏன்?
கேன் வாட்டர் சரியில்லை
கேஸ் போடலாமா?
கல்லூரி மாணவிகளுக்கு
ரூ.100/- டாப் அப் போட்டி!
கரூர் நகரில்
இலவச எம்பிராய்டரி ஒர்க்ஷாப்
நாள்: ஆகஸ்ட் 24 & 25
இடம்: வீவிங் நைட்டிங் ஃபேக்டரி ஓனர்ஸ் அசோஸியேஷன் லிட்.,
77, வடக்கு பிரதக்ஷணம் ரோடு,
தெரசா ஸ்கூல் அருகில், கரூர் - 1.
தொடர்புக்கு:
99945 75944, 96985 59966
டாட்டூஸ்...
A to Z தகவல்கள்!
வித்தியாசமான சுவைகளில்...
ஆந்திரா, கேரளா, கர்நாடகா
சமையல் வகைகள்!
32 பக்க இணைப்பு
குமுதம்
சிநேகிதி
ஆகஸ்ட் 16-31

# வடை!

இமயமலைப் பக்கம் போயிட்டு வந்த பிறகு சிம்பு ரொம்பவே மாறி இருக்கிறார். ஸ்பீக்கரை ஆன் செய்தால் தத்துவ மழைதான். இப்ப லேட்டஸ்ட் தத்துவம் 'நண்பனையும் நேசி. எதிரியையும் நேசி. நண்பன் உன் வெற்றிக்கு துணையாக இருப்பான், எதிரி உன் வெற்றிக்கு காரணமாக இருப்பான்" என்பதுதான். இதை சொந்த அனுபவம் என்கிறார்கள் சிலர். **(தனுஷிடம் கேட்டுப் பாக்லாமா?)**

---

'அனுஷ்காவைப் போல வருமா! ஆக்ஷன் சீன்களில் என்னமாய் குதித்து டஸ்டி அடித்திருக்கிறார். வாள்வீச்சு அசலாகவே இருக்கிறது' என ஆர்யா பாராட்டினால் பதிலுக்கு அடேங்கப்பா ரேஞ்சுக்கு ஆர்யாவை பாராட்டித் தள்ளி விடுகிறார் அனுஷ்கா! 'செட்டுக்கு வெளியில்தான் சாதாரணமாக இருப்பார். ஷாட்டுக்கு வந்து விட்டால் தூள்தான்' என்கிறார். இதைத்தானுங்க ஆத்மார்த்தமான நட்பு என்கிறார்கள். **(படத்துக்கான பப்ளிகுட்டி!)**



ஆன்ட்ரியா